**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 123/2015 P.W. 6/L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மரிய தங்கம் | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அ.சா1 ஐ எனக்குத் தெரியும். சுமார் 14 வருடங்களுக்கு முன்பு 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிலிருந்து சத்தம் அதிகமாக கேட்டது. நான் சென்றுப் பார்த்தபோது அங்கு கூட்டமாக இருந்தது. அ.சா1 ன் தம்பிக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் சண்டை நடந்தது. வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 14.12.2011 ம் தேதி அ.சா1 க்கும், 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இராமன்புதூர் திருக்குடும்ப ஆலயத்தில் வைத்து திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின் போது 43 பவுன்

தங்க நகை 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு 5 பவுன்தங்கசெயின், 1 பவுன்மோதிரம் போட்டார்கள் என்றும் அதன் பிறகு அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டதென்றும், இதை நான் கேள்விபட்டேன் என்றும் கூறிவிட்டு தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 123/2015 P.W. 7/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. சத்யவாணிமுத்து | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 26.03.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 2013 ம் வருடம் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பணிபுரிந்த போது 30.10.2013 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் நிலையப் பொறுப்பிலிருக்கும் போது குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளரின் உத்தரவு படி தபால்களை பார்வையிடும் போது இரணியல் குற்றவியல் நடுவர்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற Crl.M.P. No. 6924/2013, dated 08.10.2013 மனுதாரரர் சேதுனி என்பவரின் புகார் மனுவின் தன்மைப்படியும் குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண்.22/2013 சட்டப்பிரிவு 498 எ, 323, 294(பி), 506 பத்தி இரண்டு , 342, 406 இ.த.ச 1860 மற்றும் 3, 4, 5, 6 மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 2002 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் வழக்கு பதிவுச் செய்த காலகட்டத்தில் நான் 2013 முதல் 2014, 6 வது மாதம் வரை பணிபுரிந்தேன். இந்த முதல் தகவல்அறிக்கை பதிவுச் செய்த முன்பும், பின்பும் புகார்தாரர் எங்கள் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்திருந்தாரா என்றால் ஞாபகமில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.